IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

O.S.NO. - 20/2021

P.W.1 - திருமதி.லீலா

DATE - 27.01.2026.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி-

எனது மகனுக்கு தற்போது 45 வயதாகிவிட்டது. எனது மகன் 7ம் படிக்கும்போது படிப்பு வராத காரணத்தினால் Work shop ல் வேலை செய்தார். அந்த சமயத்தில் எனது கணவர் டீ கடை நடத்தி வந்தார். அந்த டீ கடையில் எனது மகன் வேலை செய்யவில்லை. வந்தாலும் சண்டை போடுவார். எனது மகன் 7ம் படிக்கும்போது படிப்பு வராத காரணத்தினால் எனது கணவரின் டீ கடையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. Work shop ல் எனது கணவர் தான் எனது மகனை வேலைக்கு சேர்த்தார். Work shop ல் எனது மகனை வேலைக்கு எனது கணவர் லாரி தொழில் செய்தால் உபயோகமாக இருக்கும் என்று சேர்த்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் 30.03.1994 ல் பத்திர எண்.1062/94 சொத்தை வாங்கும்போது எனது மகனுக்கு என்ன வயது இருக்குமென்றால் 18 வயது இருக்கும். பத்திர எண்.4195/2005 சொத்தை வாங்கும்போது எனது மகனுக்கு 30 வயது இருக்கும் என்றால் சரியாக தெரியாது. பத்திர எண்.9545/2014 சொத்து வாங்கும்போது எனது மகனுக்கு 33 வயது இருக்கும். எனது கணவர் சொத்துக்களை எனது மகனின் வருமானத்தில் இருந்தும் தான் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது மகன் ஊதாரி தனமாக செலவு செய்து கடனை ஏற்படுத்தினார். பணம் சம்பாதித்து தரவில்லை. எனது மகன் ஊதாரித் தனமாக செலவு செய்யவில்லை என்றும் அப்படி செலவு செய்திருந்தால் தாவா சொத்துக்கள் இருந்திருக்காது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது கணவர் வாங்கியதில் எனது மகனின் வருமானமும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா அயிட்டம் 1வது சொத்தில் நான் கீழ் தளத்திலும் எனது மகன் மேல் தளத்திலும் குடியிருக்கிறோம் என்றால் சரி. தாவா அயிட்டம் 2 வது சொத்தை

சிண்டிகேட் வங்கியில் அடைமானம் வைத்து கேரளாவிலுள்ள வீட்டை கட்டினேன் என்றால் சரியல்ல. சிண்டிகேட் வங்கியில் கடன் பெற்றதை எனது மகன் தான் செலுத்தினார் என்றும் அதற்கு ஆதாரத்தை தாக்கல் செய்கிறோம் என்றால் சரியல்ல. நான் தான் சிண்டிகேட் வங்கியின் கடனை செலுத்தினேன் என்பதற்கு ஆதாரம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அயிட்டம் 3 வது சொத்து பெருமுகையிலுள்ள சொத்தை எனது கணவர் விற்றுவிட்டார் என்றால் சரி. அயிட்டம் 4 வது வீட்டிற்கு வருகின்ற வாடகையை நான் பெற்று வருகிறேன் என்றால் சரி. அதிலிருந்து தான் சிண்டிகேட் வங்கிக்கு லோன் கட்டுகிறேன். வாடகையை பெற்று சிண்டிகேட் வங்கியின் லோனை கட்டுகிறேன் என்று தாவாவில் சொல்லவில்லை. அயிட்டம் 6 வது சொத்து லாரியை எனது கணவர் உயிருடன் உள்ளபோதே விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதி பதிலுரையில் அயிட்டம் 6ம் சொத்து லாரியை எனது கணவர் விற்றுவிட்டார் என்று சொல்லியும் அந்த விவரத்தை மறைத்து எனது பிரமான பத்திரிக்கையில் அயிட்டம் 6 வது சொத்து கோரியும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. அயிட்டம் 8 வது சொத்து லாரி எனது கணவர் பெயரில் இல்லை என்றும் தஷ்ணாமூர்த்தி பெயரில் உள்ளது என்றால் சரி. அயிட்டம் 8ம் சொத்து லாரி தஷ்ணாமூர்த்தி பெயரில் உள்ளதால் அந்த சொத்தை தாவாவில் சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. அயிட்டம் 6 மற்றும் அயிட்டம் 8 சொத்தான லாரிகளை சம்மந்தமே இல்லாமல் தவறாக விசயத்தை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் மகளுக்கு 22 வருடத்திற்கு முன்பு திருமணம் ஆனது. திருமணத்திற்கு 30 சவரன் நகை கொடுத்து திருமணம் செய்து வைத்தோம். 2 வது மகளுக்கு 15 வருடத்திற்கு முன்பு திருமணம் செய்து வைத்தோம். 2ம் மகளுக்கும் 30 சவரன் நகை எனது மகளே CMC மருத்துவமனையில் சம்பாதித்து நகை செய்து கொண்டார். எனது இரண்டு மகளுக்கும் தலா 30 சவரன் நகை சீர் வரிசையாக கொடுத்ததிலும் எனது மகனின் உழைப்பு உள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் பாகப் பிரிவினை செய்து கொள்ளவும் பாகம் கொடுக்கவும் தயாராக வந்தார் என்றும் நானும் எனது மருமகன்களும் அடியாட்களை வைத்து கட்டப் பஞ்சாயத்து செய்து அனுப்பிவிட்டோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது மகனின் உழைப்பும் உள்ளதால் தாவா சொத்து சரிபாகமாக பிரித்து அதில் ஒரு பாகம் எனது மகனுக்கும் ஒரு பாகம் எனது கணவரின் பாகம் எங்களுக்கம் சேரவேண்டியது என்றால் சரியல்ல.

தாவாவை உண்மைகளை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாவாவில் பாகப்பிரிவினை சதவீதம் கோரியுள்ளது தவறு என்றும் அதை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 27.01.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.01.27 17:59:54 +0530

Additional District Judge(FTC),

Vellore.